**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.143/2025**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணுச்சாமி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பெரியசாமிகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : தங்கச்சியம்மாபட்டி | வயது | : சுமார் 54 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 06.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை :

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், தங்கச்சியம்மாபட்டி கிராமம் மற்றும் அஞ்சல், மண்ணார்கவுண்டர் தோட்டத்தில் வசிக்கும் பெரியசாமிகவுண்டர் அவர்கள் மகன் சுமார் 54 வயதுள்ள கண்ணுச்சாமி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 04.07.2024 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கடனுறுதிசீட்டு – அசல் | வா.சா.ஆ.1 |

| | | | |
|---|---|---|---|
| 02 | 30.06.2025 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்குரைஞர் அறிவிப்பு – அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 03 | 01.07.2025 | வழக்குரைஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல் | வா.சா.ஆ.3 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.06 17:56:42 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்